வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 3.4.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தேர்தல் ஆணையம் இன்று பிற்பகல், மாநிலங்களின் சட்ட அமலாக்க அமைப்புகளுடன், காணொளி மூலம், ஆலோசனைக் கூட்டம் நடத்தியது.

மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று நமோ ஆப் மூலம், டிஜிட்டல் தேர்தல் பேரணியில் உரையாற்றினார்.

மக்களவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் வீட்டுக்கு வீடு உத்தரவாதம் பிரச்சார இயக்கத்தை கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, இன்று டெல்லியில் இருந்து தொடக்கி வைத்தார்

மருந்துகளின் விலை உயரக் கூடும் என ஊடகங்களில் வெளியாகி உள்ள தகவல்கள் தவறானவை என்று, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம்

தேர்தல் ஆணையம் இன்று பிற்பகல், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்ட அமலாக்க ஏஜென்சிகளுடன், சட்டம்-ஒழுங்கு நிலவரம் மற்றும் சட்ட விரோத செயல்பாடுகளின் தடுப்பு குறித்து, காணொளி மூலம், ஆலோசனைக் கூட்டம் நடத்தியது. மாநிலங்களுக்கு

இடையிலும் சர்வதேச எல்லைகளிலும் கண்காணிப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளும் இக்கூட்டத்தில் மறுஆய்வு செய்யப்பட்டன. 7 கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட மேற்குவங்கம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களுக்கும், மக்களவை தேர்தலுடன் சேர்த்து, சட்டமன்ற தேர்தலும் நடைபெற உள்ள ஆந்திரப் பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கும், தேர்தல் ஆணையம், நேற்று, சிறப்பு பார்வையாளர்களை நியமித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-நமோ

மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று நமோ ஆப் மூலம், டிஜிட்டல் தேர்தல் பேரணியில் உரையாற்றினார். 3-ஆம் கட்ட மக்களவை தேர்தலின் போது உத்தரபிரதேசத்தின் பல்வேறு தொகுதிகளில் பிஜேபி சார்பில் பணியில் ஈடுபட உள்ள வாக்குச் சாவடி நிலைத் தொண்டர்கள், இதில் கலந்து கொண்டனர். உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த பிஜேபி தொண்டர்கள், கடந்த 10 ஆண்டுகளில் தேர்தல் வல்லுனர்களின் கருத்துக்களை பலமுறை பொய்யாக்கி இருப்பதாகவும், இம்முறையும், ஒவ்வொரு பூத் அளவிலும் கட்சிக்கு சாதனை வெற்றி கிடைக்கத் தேவையான ஏற்பாடுகளை, சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டுமென்றும், திரு நரேந்திர மோடி, தமது உரையில் கூறினார். வாக்குச் சாவடி நிலையிலான பிஜேபி தொண்டர்கள், கட்சியின் கொள்கைகள் மூலமாகவும், தங்களின் பணிவு மூலமாகவும்,

வாக்காளர்களை கவர வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். தொண்டர்கள்தான், தேர்தல் களத்தில் கட்சியின் முகம் என்பதால், இவர்கள் தங்களை சுற்றி நடப்பது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

*காங்கிரஸ்*

மக்களவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் **வீட்டுக்கு வீடு உத்தரவாதம்** பிரச்சார இயக்கத்தை கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, வடகிழக்கு டெல்லி தொகுதியில் இருந்து இன்று தொடக்கி வைத்தார். பிஜேபி ஆட்சியில் வேலை வாய்ப்பின்மை அதிகரித்து விட்டதாக அவர் குற்றம் சாட்டினார். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், அரசுப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப் படும் என்று அவர் தெரிவித்தார். மக்களவை தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால், நாடு முழுவதும், சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

*ராகுல்காந்தி*

மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி இன்று, கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார். முன்னதாக கல்பேட்டா பகுதியில் அவர் நடத்திய சாலை பவனியில் காங்கிரஸ் பொதுச் செயலர்கள் திருமதி பிரியங்கா காந்தி-திரு கேசி வேணுகோபால், கேரளா எதிர்கட்சி தலைவர் திரு வி டி சதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வயநாடு தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எல்டிஎப் வேட்பாளர் திருமதி ஆனி

ராஜாவும் இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். மாநில பிஜேபி தலைவரும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளருமான திரு கே சுரேந்திரன், நாளை வேட்பு மனு தாக்கல் செய்கிறார். அடுத்த மாதம் 26-ஆம் தேதி 2-ஆம் கட்ட மக்களவை தேர்தல் நடைபெற உள்ள 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கேரளமும் அடங்கும். இந்த 2-ஆம் கட்ட மக்களவை தேர்தலில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாகும். நாளை மறுநாள் 5-ஆம் தேதி வேட்பு மனு பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை திரும்ப பெற வரும் 8-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*பிரச்சாரம்*

இதற்கிடையே, தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், வரும் 19-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அரசியல் கட்சித் தலைவர்கள், மிகுந்த முனைப்புடன் தத்தம் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

*எல் முருகன்*

மத்திய அமைச்சர் டாக்டர் எல் முருகன் உட்பட மாநிலங்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 12 உறுப்பினர்கள் இன்று பதவி ஏற்றுக் கொண்டனர். மாநிலங்களவைத் தலைவரும், குடியரசு துணைத் தலைவருமான திரு ஜகதீப் தன்கர், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள தமது

அறையில் வைத்து, இவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பீகார் மாநிலத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு சஞ்சய் யாதவ், திருமதி தரம்ஷீலா குப்தா இமாச்சல பிரதேசத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஹர்ஷ் மகாஜன், குஜராத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு கோவிந்த்பாய் தோலாக்கியா, கர்நாடகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு ஜிசி சந்திரசேகர் ஆகியோர், மாநிலங்களவையின் புதிய உறுப்பினர்களில் அடங்குவர். மாநிலங்களவையில் இருந்து முன்னாள் பிரதமர் திரு மன்மோகன்சிங் உட்பட 56 உறுப்பினர்கள் இந்த வாரம் ஓய்வு பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

உண்மைத் தகவல்

மருந்துகளின் விலை உயரக் கூடும் என ஊடகங்களில் வெளியாகி உள்ள தகவல்கள் தவறானவை என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம், அட்டவணை மருந்துகளுக்கான விலை உச்ச வரம்புகளை, மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் ஆண்டுதோறும் திருத்தி அமைப்பதாகவும் இம்முறை, 0.00551 சதவிகித மொத்த விலைக் குறியீட்டு உயர்வினால், 782 மருந்துகளுக்கான உச்சவரம்பு விலைகளில் மாற்றம் இராது என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. 54 மருந்துகளின் விலை, 1 பைசா அளவில் உயரக் கூடும் என்றாலும், இந்த விலை உயர்வை பயன்படுத்திக் கொள்வதோ, அல்லது விட்டு விடுவதோ, மருந்து உற்பத்தியாளர்களின் விருப்பம்

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அட்டவணை அல்லாத மருந்துகளின் விலைகளை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரம், உற்பத்தியாளர்களுக்கு உண்டு என்றாலும், 12 மாதங்களில் 10சதவிகிதத்திற்கு மேல் விலைகளை உயர்த்த அனுமதி இல்லை என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ரிசர்வ் வங்கி*

நடப்பு நிதியாண்டிற்கான, ரிசர்வ் வங்கி பணக் கொள்கைக் குழுவின் முதலாவது கூட்டம் மும்பையில் இன்று தொடங்கி உள்ளது. 2 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இக்கூட்டத்தின் முடிவில் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ் வரும் வெள்ளிக்கிழமை, பணக் கொள்கை அறிக்கையை வெளியிடுவார். கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில், ரிசர்வ் வங்கி இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன்கள் மீதான ரெப்போ வட்டி விகிதத்தை மாற்றாமல் 6.5 சதவிகிதமாகப் பராமரிக்கத் தீர்மானிக்கப் பட்டது.

*ராஜ்நாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் இந்தியா, உலகின் முதல் 5 பொருளாதாரங்களில் ஒன்றாக மேம்பட்டுள்ளதாகவும், 2027-ஆம் ஆண்டிற்குள், உலகின் 3-ஆவது பொருளாதாரமாக இந்தியா மேம்படும் என்று, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று காஜியாபாத்தில், தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர், 2047-ஆம்

ஆண்டிற்குள், உலகின் மிகப் பெரிய பொருளாதாரமாக மேம்படும் வல்லமை, இந்தியாவிற்கு இருப்பதாக கூறினார். நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

*வாக்காளர் கல்வி*

முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான தேர்தல் ஆணையத்தின் ஸ்வீப் திட்டத்தின் கீழ் இன்று புதுச்சேரியில் பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற, இளம் வாக்காளர்களுக்கான தேர்தல் விழிப்புணர்வு விளக்க நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் கலந்து கொண்டு உரையாற்றினார். சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தி, தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தால் வடிவமைக்கப் பட்டுள்ள, பசுமைத் தேர்தல் சின்னத்தையும் வெளியிட்டார். கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த ஜனநாயக அறையை அவர் திறந்து வைத்து, காய்கறிகளை செதுக்கி மாணவியர் உருவாக்கிய கலைப் பொருட்களையும் பார்வையிட்டார். தேர்தல் துறை சார்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளையும் அவர் வழங்கினார். தேர்தல் பற்றிய தவறான தகவல்களில் இருந்து விழிப்புடன் இருப்பது குறித்து, விளக்க காணொளி ஒன்றும் இந்நிகழ்ச்சியின் போது திரையிடப்பட்டது. துணைத் தலைமை தேர்தல் அதிகாரி திரு ஆதர்ஷ், உதவி தேர்தல் நடத்தும்

அதிகாரி திரு கந்தசாமி, ஸ்வீப் திட்டத்திற்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு கோவிந்தசாமி, கல்லூரி முதல்வர் முனைவர் ராஜி சுகுமார் உள்ளிட்டவர்களும், நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

என்சி-இஆர்டி

பள்ளி மாணவர்களுக்கான என்சி-இஆர்டி பாடப் புத்தகங்களை உரிய நேரத்தில் வழங்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுவதாக, கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது. 1, 2, 7, 8, 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கான 33 லட்சம் பாடப் புத்தகங்கள் ஏற்கனவே அச்சிடப்பட்டு, கடைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் என்சி-இஆர்டி தெரிவித்துள்ளது. 4, 5, 9, மற்றும் 11-ஆம் வகுப்பிற்கான பாடப் புத்தகங்கள் இம்மாதம் சந்தையில் கிடைக்கும் என்றும், புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையிலான, 3 மற்றும் 6-ஆம் வகுப்புப் பாடப் புத்தகங்கள், இம்மாதம் அல்லது அடுத்த மாதத்தில் வெளியிடப்படும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும், கவலைப்படத் தேவையில்லை என்றும் என்சி-இஆர்டி கேட்டுக் கொண்டுள்ளது.

ஐபிஎல்

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, விசாகப் பட்டிணத்தில் நடைபெறும் போட்டியில், டெல்லி-கொல்கத்தா அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு, லக்னோ-பெங்களூர் அணிகளுக்கு

இடையே பெங்களூரில் நடைபெற்ற போட்டியில் லக்னோ அணி, 28 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மணிக்கு 156.7 கிலோ மீட்டர் வேகத்தில் பந்து வீசி, 3 விக்கெட்டுகளை சாய்த்த, லக்னோ அணியின் வேகப் பந்து வீச்சாளர் மயங்க் யாதவ், ஆட்ட நாயகனாக அறிவிக்கப் பட்டார்.

*மோடி-வாழ்த்து*

போர்த்துகீசிய குடியரசு நாட்டின் பிரதமராக பதவி ஏற்றுள்ள, திரு லூயிஸ் மாண்டநீக்ரோ-விற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும் போர்ச்சுக்கல் நாட்டிற்கும் இடையே, நீண்டகாலமாக நிலவும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில் ஒருங்கிணைந்து செயல்பட, தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், பிரதமர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தேர்தல் ஆணையம் இன்று பிற்பகல், மாநிலங்களின் சட்ட **அமலாக்க அமைப்புகளுடன்**, காணொளி மூலம், ஆலோசனைக் கூட்டம் நடத்தியது.

மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று **நமோ ஆப்** மூலம், **டிஜிட்டல் தேர்தல் பேரணியில்** உரையாற்றினார்.

மக்களவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் **வீட்டுக்கு வீடு உத்தரவாதம்** பிரச்சார இயக்கத்தை கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, இன்று டெல்லியில் இருந்து தொடக்கி வைத்தார்

மருந்துகளின் விலை உயரக் கூடும் என ஊடகங்களில் வெளியாகி உள்ள தகவல்கள் தவறானவை என்று, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/3.4.2024/Script/

---------------------